# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் - ஓர் அறிமுகம்

சிந்தனை, மனசாட்சி, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மனித உரிமை என்றால் என்ன என்பதோடு அதனை மட்டுப்படுத்தமுடியுமா, அவ்வாறு மட்டுப்படுத்தமுடியுமாயின் எப்போது மட்டுப்படுத்தப்படலாம் என்பதை விளக்கும் 8 முன்வைப்புகளைக் கொண்ட தொகுதியில் இது முதலாவதாகும். இந்த சுருக்கமான அறிமுகத்தினை, மனித உரிமைகளால் யார் அல்லது எது பாதுகாக்கப்படுகிறது மற்றும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரம் என்னென்ன உரிமைகளை எமக்கு வழங்குகின்றன என்பவற்றைப் பற்றி சிந்திப்பதனூடாக ஆரம்பிக்கப்போகிறோம்.

நான் வினாவொன்றைக் கேட்பதுடன் ஆரம்பிக்க விரும்புகிறேன். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய மனித உரிமையினால் எவ்வெவ் மதங்கள் பாதுகாக்கப்படுகின்றன?

உலகின் பிரதான மதங்களே பாதுகாக்கப்பட்டுள்ளன என நீங்கள் நினைக்கின்றீர்களா?

அல்லது, சிறிய அல்லது வழக்கத்திற்கு மாறான மதங்கள் உள்ளடங்கலாக அனைத்து மதங்களும் பாதுகாக்கப்பட்டுள்ளனவா?

அல்லது, ஒருவேளை அனைத்து மதங்கள் மற்றும் அனைத்து வகையான நம்பிக்கைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளனவா?

உண்மையில் இது ஒரு சூட்சுமமான வினா. எவ்வெவ் மதங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்று நான் உங்களிடம் கேட்டேன். மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது மதங்கள் மற்றும் நம்பிக்கைகளையே பாதுகாக்கின்றது என்றே பொதுவாக மக்கள் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் அப்படியல்ல. ஏனைய எல்லா மனித உரிமைகளையும்போன்று, மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமும் மக்களையே பாதுகாக்கின்றது, மாறாக அவர்களுக்குள் உள்ள மதங்களையோ அல்லது நம்பிக்கைகளையோ அல்ல.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது, தொன்மையான மதங்கள், புதிய மதங்கள், நாடொன்றில் பாரம்பரியமாக உள்ள மதங்கள் மற்றும் நாடொன்றில் பாரம்பரியமாகக் காணப்படாத மதங்கள் என்பவற்றினால் அடையாளப்படுத்தப்படுகின்ற, அவற்றை நம்புகின்ற அல்லது அவற்றை அனுட்டிக்கின்ற மக்களையே பாதுகாக்கின்றது. அடிப்படை வினாக்கள் தொடர்பில் மத சார்பற்ற நம்பிக்கைகளைக் கொண்டுள்ள நாத்திகர்கள், மனிதாபிமானவாதிகள் மற்றும் சமாதானவாதிகள் போன்ற மக்களையும் இது பாதுகாக்கின்றது. அவர்கள் எந்நாட்டில் வாழ்கின்றனர் என்பது பொருட்படுத்தப்படுவதில்லை.

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது மதம் அல்லது நம்பிக்கை தொடர்பில் எவ்வித அக்கறையினையும் கொண்டிராத மக்களையும் கூட பாதுகாக்கின்றது.

இதனை வேறுவகையில் கூறுவதானால், மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது அனைவரையும் பாதுகாக்கின்றது! ஆகவே, எமக்கு என்னென்ன பாதுகாப்புகள் அல்லது உரிமைகள் காணப்படுகின்றன? அதனை நாம் அறிந்து கொள்வதற்கு, சர்வதேச மனித உரிமைகள் பிரகடனங்கள் மற்றும் சமவாயங்கள் என்பவற்றை ஆராய வேண்டும். அத்தகைய முக்கியமான இரு சமவாயங்களாவன:

ஐக்கிய நாடுகள் சபை அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 18 மற்றும்

ஐக்கிய நாடுகள் சபை குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18

ஐக்கிய நாடுகள் சபை பிரகடனங்கள் அரசியல் எண்ணங்கள் பற்றி குறிப்பிடுகின்ற அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கைகள் மற்றும் சமவாயங்கள் என்பன சட்டரீதியாக பிணிக்கும் தன்மை வாய்ந்தனவாகும். குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென நாம் பார்ப்போம்.

## Article 18

1. Everyone shall have the right to freedom of thought, conscience and religion. This right shall include freedom to have or to adopt a religion or belief of his choice, and freedom, either individually or in community with others and in public or private, to manifest his religion or belief in worship, observance, practice and teaching.

2. No one shall be subject to coercion which would impair his freedom to have or to adopt a religion or belief of his choice.

3. Freedom to manifest one's religion or beliefs may be subject only to such limitations as are prescribed by law and are necessary to protect public safety, order, health, or morals or the fundamental rights and freedoms of others.

4. The States Parties to the present Covenant undertake to have respect for the liberty of parents and, when applicable, legal guardians to ensure the religious and moral education of their children in conformity with their own convictions.

பாதுகாக்கப்பட்டுள்ள நபர்களுக்காக இது நடைமுறையில் எவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றது? நமக்கு காணப்படுகின்ற உரிமைகள் யாவை? சர்வதேச சட்டங்களினால் மதம் மற்றும் நம்பிக்கை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை முன்னிலைப்படுத்துகின்ற ஏழு தலைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்கு நான் விரும்புகின்றேன்:

முதல் இரண்டும் மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்குரிய உரிமையின் மையத்தினை உருவாக்குகின்றன:

- மதம் அல்லது நம்பிக்கை ஒன்றினைக் கொண்டிருப்பதற்கான, தெரிவு செய்வதற்கான, மாற்றுவதற்கான அல்லது அதிலிருந்து விலகுவதற்கான சுதந்திரம், மற்றும்
- மதம் அல்லது நம்பிக்கை ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான அல்லது வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்.
- இவற்றுக்கு மேலாக, மதம் அல்லது நம்பிக்கை தொடர்பான விடயங்களில் பலவந்தப்படுத்தப்படுதல் மற்றும்
- பாரபட்சத்திற்குள்ளாக்கப்படுதல் என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை எமக்கு உண்டு
- மதம் மற்றும் நம்பிக்கையுடன் தொடர்புறுகின்ற பெற்றோர்களுக்கான மற்றும் சிறுவர்களுக்கான உரிமைகள்
- மற்றும் மனசாட்சிக்கமைவான ஆட்சேபனைகளைக் கொண்டிருப்பதற்கான உரிமை

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் மற்றுமொரு பிரதான கூறு யாதெனில், அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மட்டுப்படுத்தமுடியுமா மற்றும் எப்போது மட்டுப்படுத்தலாம் என்பது தொடர்பான விதிகள் ஆகும்.

இவ் உரிமைகள் நடைமுறையில் எவ்வாறு பொருள் கொள்ளப்படுகின்றன என்பது தொடர்பான ஆழமான பார்வையுடன், இவ் ஒவ்வொரு தலைப்பு தொடர்பாகவும் ஒரு படத்தினை நீங்கள் வலைத்தளத்தில் காணலாம்.

ஆக்க உரிமை: SMC 2018